# அன்புகூரப்பட இயலாதவர்களை அன்பு கூருவது எவ்வாறு?

## (12:14, 17-21)

*பள்ளிப்படிப்பை முடிக்கவிருந்த ஒரு இளைஞன், ஒருநாள் "எனது கடைசித் தேர்வை நான் எழுதிவிட்டேன்!" என்று கூவியபடியே வீட்டிற்குள் ஓடிவந்தான். அவனது தந்தை தலையசைத்தார், ஆனால் அவர் "ஆனால் வாழ்வின் தேர்வுகள் இப்போதுதான் தொடங்குகின்றன என்பதை நீ உணர்ந்தறியவில்லை!" என்று நினைத்தார். நம்மில் பலர் நாம் முறையான பள்ளிப்படிப்பை முடித்த பின்னரும் அன்றாடம் வாழ்வில் பரீட்சிக்கப்படுகிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். நமது வழியில் வருகிற தேர்வுகள் யாவற்றிலும், நாம் படிக்கவிருக்கும் வசனப்பகுதி முன்மொழியும் தேர்வைக் காட்டிலும் கடினமானது வேறெதுவும் இல்லாதிருக்கலாம்.*

*அந்தத் தேர்வு ரோமர் 12:14ல் அறிமுகப்படுத்தப்படுகிறது: "உங்களைத் துன்பப் படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்.'' இது 17 முதல் 21 வரையிலான வசனப்பகுதியில் விரித்துரைக்கப்படுகிறது:*

> *ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். பிரியமானவர்களே, "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்," என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். "அன்றியும், உன் சத்துருபசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்." நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.*

*நாம் 14ம் வசனத்தையும் உள்ளடக்கினால், இவ்வசனப்பகுதியானது நான்கு எதிர்மறைகளைக் கொண்டுள்ளது. அந்த நான்கின் செய்தியானது அடிப்படையில் ஒரேவிதமானதாக உள்ளது.[1]*

- ''[உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை] சபியாதிருங்கள்'' (வசனம் 14).
- "ஒருக்காலும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்" (வசனம் 17).
- "நீங்களே பழிவாங்காதிருங்கள்" (வசனம் 19).
- "தீமையினால் வெல்லப்படாதிருங்கள்" (வசனம் 21).

இந்த நான்கு எதிர்மறைகளும் நேர்மறைகளால் சமானப்படுத்தப்படுகின்றன. உங்கள் சத்துருக்களை ஆசீர்வதியுங்கள் (வசனம் 14). சரியானவற்றைச் செய்து, எல்லா மனுஷரோடும் சமாதானமாக இருக்க முயற்சிசெய்யுங்கள் (வசனங்கள் 17, 18). பழிவாங்கும் விஷயத்தைத் தேவனுடைய கரங்களில் விட்டு விடுங்கள், மற்றும் உங்கள் சத்துருக்கள்மீது அன்பைக் காண்பிப்பதில் கவனம் செலுத்துங்கள் (வசனங்கள் 19, 20). தீமையை நன்மையினால் வெல்லுங்கள் (வசனம் 21).

ஜான் கச்செல்மேன் என்பவர், ரோமர் 12:17-21ஐ "உள்ளான தனிப்பட்ட உறவுகள் மீதான மாபெரும் வசனப்பகுதிகளில் ஒன்று'' என்று அழைத்தார்.[2] உங்களைப் புண்படுத்த முயற்சி செய்யும் அவிசுவாசிகளை - துன்புறுத்துபவர்கள் (வசனம் 14), சத்துருக்கள் (வசனம் 20) மற்றும் தீமை செய்யும் மனிதர்கள் (வசனம் 21) - பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தார். இருப்பினும் இவ்வேத பாட வசனப்பகுதியானது, கருத்து ஒருமைப்படாத சகோதரர்களுடன் ஒன்றாயிருத் தலுக்கு நடைமுறைப்படுத்தப்பட முடியும். இது கலகத்தால் நிரம்பியுள்ள குடும்பங்களுக்குக்கூட உதவ முடியும். நான் இந்தப் பாடத்திற்கு "அன்புகூரப்பட இயலாதவர்களை அன்புகூருவது எவ்வாறு?" என்று தலைப்புக் கொடுத்துள்ளேன். நாம் முதலில் 14ம் வசனத்தைச் சுருக்கமாகக் கண்ணோக்கிவிட்டுப் பின்பு 17 முதல் 21 வரையிலான வசனங்கள்மீது கவனம் குவிப்போம்.

## அவருக்காக ஜெபியுங்கள் (12:14)

14ம் வசனத்தில் நாம், "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதி யுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்" என்று வாசிக்கிறோம். ஏற்கனவே நாம், "ஆசீர்வதித்தல்" என்பது "அவர்களை ஆசீர்வதிக்கும்படி தேவனி டத்தில் கேட்டல்" என்றும், "சபித்தல்" என்பது "அவர்களை சபிக்கும்படி தேவனி டத்தில் கேட்டல்" என்றும் அர்த்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளோம். முதலா வதை நாம் செய்ய வேண்டும்; இரண்டாவதை நாம் செய்யக்கூடாது. நாம் நமது விரோதிகளுக்காக *ஜெபிக்க வேண்டும்* என்பது 14ம் வசனத்தை விளக்குவதற்கான ஒரு எளிய வழியாக உள்ளது.

ஆராதனை ஊழியத்திற்கு வந்திருந்து, ஆனால் நகரத்திலேயே மிகவும் மகிழ்ச்சியற்றவரைப் போலக் காணப்பட்ட ஒரு மனிதரைப் பற்றி நான் வாசித் திருக்கிறேன்.[3] ஒருநாள் அவர் பிரசங்கியாருடைய அலுவலகத்திற்கு வந்து, "மற்ற உறுப்பினர்கள் யாவரும் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? அல்லது அவர்கள் வெறுமனே நடிக்கிறார்களா?" என்று கேட்டார்.

அதற்குப் பிரசங்கியார், "அவர்களில் பெரும்பான்மையானவர்கள் உண்மை யிலேயே மகிழ்ச்சியாக இருக்கின்றனர் என்று நான் நினைக்கிறேன்'' என்று கூறினார்.

அதற்கு அந்த மனிதர், "நல்லது, நான் அவ்வாறு இருப்பதில்லை. நான் பரிதாபமான நிலையில் இருக்கிறேன்" என்று கூறினார்.

அந்த மனிதரைக் கவலைப்படுத்துவது எது என்பது பற்றி அவர்கள் பேசினர். அவர் தாம் வெறுக்கும் ஐந்து போட்டியாளர்களைக் கொண்டிருப்பதாகத் தெரியவந்தது. "அவர்கள் கயவர்களின் கூட்டமாக உள்ளனர்!" என்று அவர் கூறினார். "அவர்கள் எல்லாரும் சாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!" என்றும் அவர் கூறினார்.

பிரசங்கியார், "நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க என்ன செய்ய வேண்டும் என்று நான் உங்களுக்குக் கூற முடியும், ஆனால் நீங்கள் அதைச் செய்யமாட்டீர்கள்" என்று கூறினார்.

"ஆம், அதை நான் செய்வேன்" என்று அந்த மனிதர் கூறினார்.

பிரசங்கியார் தமது தலையை [எதிர்மறைக்குறிப்பில் அசைத்து], "இல்லை, நீங்கள் செய்யமாட்டீர்கள்" என்று கூறினார்.

"ஆம், நான் செய்வேன்" என்று அம்மனிதர் வலியுறுத்தினார் "என்ன செய்ய வேண்டும் என்பதை மாத்திரம் கூறுங்கள்" என்றார்.

பிரசங்கியார், "ஒவ்வொரு இரவிலும், நீங்கள் படுக்கைக்குச் செல்வதற்கு முன்னர், முழங்கால்படியிட்டு, உங்கள் போட்டியாளர்கள் ஒவ்வொருவருடைய பெயரையும் கூறி அவர்களுக்காக ஜெபியுங்கள். புதிய வர்த்தகத்தைக் கொண்டு அவர்களைத் தேவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்று அவரிடத்தில் கேளுங்கள்" என்று கூறினார்.

"என்ன!" என்று திகைப்புற்ற அம்மனிதர், "நான் அதைச் செய்யப்போவ தில்லை" என்று கூறினார்.

பிரசங்கியார், "நீங்கள் அதைச் செய்யமாட்டீர்கள் என்று நான் உங்களுக்குக் கூறினேனே" என்றார்.

அந்த மனிதர், "நான் அதைச் செய்வேன் என்று கூறினேன், இல்லையா? நீங்கள் என்னைத் தந்திரமாக ஏமாற்றிவிட்டீர்கள்" என்று முறுமுறுத்தார்.

வாரங்கள் கடந்துசென்றபோது, அந்த மனிதருடைய முகநாடி படிப்படியாக மாறியதைப் பிரசங்கியார் கண்டார். ஒருநாள் அவருடைய அலுவலகத்திற்கு அந்த மனிதர் மீண்டும் வந்தார். "நல்லது பிரசங்கியாரே, அது வேலைசெய்தது. இப்போது நான் எனது போட்டியாளர்களுடன் நேர்த்தியாக ஒன்றுபட்டுச் செல்லு கிறேன். ஆனால் நான் ஒரு விஷயத்தை அறிக்கை செய்தாக வேண்டும். நான் அவர்களுக்காக ஜெபிக்கத் தொடங்கியபோது, நான் நின்று மேல் நோக்கி, 'கர்த்தாவே, நான் கூறுவதில் எந்த ஒரு வார்த்தையையும் நான் அர்த்தப்படுத்துவ தில்லை என்று நீர் அறிவீர்' என்று கூறினேன். நிறைவாக, நான் அதை அர்த்தப்படுத்தத் தொடங்கினேன் - மற்றும் இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்று கூறினார்.

அன்புகூரப்பட இயலாத ஒரு நபரை நீங்கள் எவ்வாறு அன்புகூர இயலும்? அவருக்காக ஜெபித்தல் என்பதே நீங்கள் செய்யக்கூடிய முதல் விஷயமாக உள்ளது.

## அவருடன் ஒன்றிணைந்து செல்ல முயற்சி செய்யுங்கள் (12:17, 18)

பரீட்சையின் அந்தப் பகுதி கடினமானதாக இருந்தது, ஆனால் பரீட்சை யானது 17 மற்றும் 18ம் வசனங்களில் இன்னும் அதிகமான அறைகூவலைக்

கொடுக்கிறது: "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்."

**எதிர்மறை: எதிர்த்துத் தாக்காதீர்கள் (வசனம் 17அ).**

*17ம் வசனம், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்" என்று தொடங்குகிறது. சுய பாதுகாப்பு என்பது மிகவும் அடிப்படையான உணர்வு உந்துதல்களில் ஒன்றாக உள்ளது. யாரேனும் ஒருவர் நம்மைத் தவறாக நடத்தும்போது, நாம் திருப்பித் தாக்க விரும்புகிறோம். நாம் அவர்களுக்கு வட்டியுடன் திருப்பிக் கொடுக்க விரும்புகிறோம்.[4] ஒரு குழந்தை, தான் அடித்ததை நியாயப்படுத்தும் வகையில், "ஆனால் அவன்தானே என்னை முதலில் அடித்தான்!" என்று கூறுகிறான். பலர் இந்த மனநிலையை விட்டு வெளியே வளர்வதில்லை. 2ம் வசனத்தில் பவுல், "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்" இருங்கள் என்று கூறினார். "தீமைக்குத் தீமையைப் பதில்செய்!" என்ற உலகத்தின் ஆணைக்கு ஒத்த வேஷம் தரியாதிருத்தல் எவ்வளவு கடினமானதாக உள்ளது!*

*இந்தப் பாடக்கருத்தின்மீது இயேசுவின் திகைக்கச் செய்யும் கூற்றை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா?*

> *" 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ" (மத்தேயு 5:38-41).*

*டக்ளஸ் J. மூ என்பவர், எதிர்த்துத் தாக்காதிருக்கும் கொள்கையை, "கிறிஸ்தவர்களை அடையாளப்படுத்துவதற்கான பண்புகள் யாவற்றிலும் மிகவும் தனிச்சிறந்தவற்றில் ஒன்று" என்று அழைத்தார்.[5]*

*பவுலின் கட்டளையில் விதிவிலக்கு ஏதேனும் உள்ளதா? அவர், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்" என்று கூறினார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). கிரேக்க வசனத்தில் "ஒருவனுக்கும்" என்பது வலியுறுத்தத்திற்காக வாக்கியத்தின் முதலில் அமைந்துள்ளது. நம்மில் பெரும்பான்மையானவர்களுக்கு இது என்ன ஒரு பரீட்சையாக உள்ளது!*

**நேர்மறை: யோக்கியமானவைகளைச் செய்யுங்கள் (வசனம் 17ஆ).**

*நாம் தீமைக்குத் தீமை செய்யக்கூடாது என்றால், நாம் தவறாக நடத்தப்படும்போது நாம் என்ன செய்ய வேண்டும்? 17 மற்றும் 18ம் வசனங்களின் நேர்மறையான கட்டளைகளுக்கு நாம் திரும்புகிறோம். பவுல், "எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்"[6] என்று கூறினார் (வசனம் 17ஆ). "யோக்கியமானவைகள்" என்பது kalos என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது "உள்ளார்ந்த வகையில் 'நல்லதாக' உள்ளதைக்*

குறிக்கிறது." இவ்வசனத்தில் இது, "ஒழுக்கரீதியாக நல்ல, சரியான, கண்ணிய மான, கனப்படுத்தக்கூடிய" என்பதைக் குறிக்கிறது.[7] மற்றவர்கள் எப்படி நடந்துகொண்டாலும், ஒரு கிறிஸ்தவர், ஒரு நல்ல உதாரணமாக இருக்க முயற்சி செய்கிறார். வேறொரு இடத்தில் பவுல், "கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் [இது *kalos* என்பதிலிருந்து வந்துள்ளது] செய்ய நாடுகிறோம்" என்று எழுதினார் (2 கொரிந்தியர் 8:21).

ரோமர் 12:17ன் பிற்பகுதியை J. B. பிலிப்ஸ் என்பவரின் மொழிபெயர்ப்பு பின்வருவது போன்று தரவழைத்துள்ளது. " 'மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல' என்று கூறாதீர்கள்." ஒரு கிறிஸ்தவர், "மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல" என்று கூறக்கூடிய சூழ்நிலைகள் உள்ளன - எடுத்துக்காட்டாக, அவர் தமது விசுவாசத்திற்காக மற்றும் உறுதிப்பாடுகளுக்காக விமர்சனம் செய்யப்படும் வேளை. இருப்பினும் சட்டப்படி, ஒரு கிறிஸ்தவர் அவதூறுக்கு மேலான வாழ்வை வாழ முயற்சி செய்ய வேண்டும். பிலிப்ஸ் என்பவரின் பொழிப்புரை, "உங்கள் வெளிப்படையான நடக்கை விமர்சனத்திற்கு மேலானதாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூடுதலாகக் கூறுகிறது.

**நேர்மறை: சமாதானமாயிருங்கள் (வசனம் 18).**

அடுத்ததாகப், பவுல் நாம் - நம்மைப் புண்படுத்த முயற்சிப்பவர்கள் உட்பட - ஒவ்வொருவருடனும் சமாதானமாக வாழ நம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று கூறினார். 18ம் வசனம், "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று கூறுகிறது. 17ம் வசனத்தில் உள்ளதுபோலவே, அப்போஸ்தலர் தமது கட்டளையில் எல்லாவற் றையும் உள்ளடக்கத்தக்கவாறு இருந்தார்: "*எல்லா மனுஷரோடும்* சமாதானமா யிருங்கள்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது).

யாரேனும் ஒருவர் நிச்சயமாக, "ஆனால் அது சாத்தியமற்றதாக உள்ளது!" என்று மறுத்துரைப்பார். "கூடுமானால் ..." என்று கூறியபோது பவுல் அதை முன்னெதிர்நோக்கினார். சிலவேளைகளில் சமாதானம் என்பது சத்தியத்தை அல்லது ஒருமைப்பாட்டு நிலையை விட்டுக்கொடுத்தல் என்ற விலையைக் கோருவதால், அது சாத்தியமற்றதாக உள்ளது - மற்றும் அது செலுத்துவதற்கு மிகவும் உயர்ந்த விலையாக உள்ளது. மற்ற வேளைகளில், நாம் என்ன செய் தாலும் மற்ற தனிநபர்கள் ஒப்புரவாகுதலுக்கு எதிராக அமைந்துள்ளதால், சமாதானம் என்பது சாத்தியமற்றதாக உள்ளது.

அது நம்மைப் பவுல் கூறும் இரண்டாவது தகுதிக்குக் கொண்டுவருகிறது: "*உங்களாலானமட்டும்*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). கெச்சல்மான் என்பவர், "உறவுமுறையில் நமது பகுதிக்கு மாத்திரமே நாம் பொறுப்பாளிகளாக இருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.[8] இன்னொரு நபர் என்ன செய்கிறார் என்பதையோ அல்லது அவர் எவ்வாறு பதில்செயல் செய்வார் என்பதையோ, நீங்கள் ஆளுகை செய்ய இயலாது. இருப்பினும், அவர் ஏற்றுக்கொள்ளக்கூடியவ ராக இருந்தாலும் இல்லை என்றாலும், சமாதானத்தை மேம்படுத்த *உங்களால்* இயன்ற எல்லாவற்றையும் *நீங்கள்* செய்தாக வேண்டும். மலைப்பிரசங்கத்தில் இயேசு, "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனு டைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:9).

*சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு நம்மால் இயன்ற எல்லாவற்றையும் செய்யாதிருப்பதற்கு நமக்குச் சாக்குப்போக்குகள் அளிப்பதற்காகப் பவுல் - "கூடுமானால்," "உங்களாலானமட்டும்" என்ற - இரண்டு தகுதிகளைக் கொடுக்க வில்லை என்று நான் வலியுறுத்துவது அவசியமாக உள்ளது. அவர் "நீங்கள் முன்கோபக்காரராக இருந்தால் மற்றும் உங்களால் செய்ய இயலவில்லை என்றால், அது பரவாயில்லை" என்றோ அல்லது "நீங்கள் சிறிதளவு முயற்சி செய்திருந்தால், அதுவே தேவன் எதிர்பார்க்கும் விஷயமாகும்" என்றோ* கூற வில்லை. *"எல்லா மனிதர்களுடனும் சமாதானமாயிருக்க" நமது பெலத்திற்குள் இருக்கும் எல்லாவற்றையும் நாம் செய்ய வேண்டும் என்று அவர் அறைகூவல் விடுத்தார்.*

*யாரேனும் ஒருவர், "ஆனால் நான் தீமைக்குத் தீமை செய்யாவிட்டால், எனது விரோதிகள், அதைத் தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக்கொள்வார்களே" என்று நினைக்கலாம். ஒருவேளை அதுவே விஷயமாகவும் இருக்கலாம். இன்னொருவர், "நான் தீமைக்குத் தீமை செய்வதிலிருந்து விலகியிருப்பினும், எனது விரோதிகள் இன்னும் என்னை வெறுப்பார்களே" என்று கூறி மறுப்புரைக்க லாம். அது ஒரு சாத்தியக்கூறாகவே உள்ளது - ஆனால் அவர்களின் வெறுப்பு என்பது* அவர்களுடைய *பிரச்சனையாக உள்ளது. சமாதானத்தைக் கொண்டுவர நம்மால் எது முடியுமோ நாம் அதைச் செய்ய வேண்டும் என்று பவுல் கூறினார். காட்டு மிருகம் ஒன்றை வலையிலிருந்து விடுவிக்க முயற்சிசெய்த பரிவிரக்கமுள்ள ஒரு மனிதரைப் பற்றிய கதையொன்று சொல்லப்படுவதுண்டு. அவர் அவ்வாறு செய்தபோது, அந்த மிருகம் சீறிப்பாய்ந்து அவரை நகத்தினால் பற்றிப்பிடிக்க முயற்சி செய்தது. அவ்வழியே கடந்து சென்றவர் ஒருவர், "அந்த மிருகத் திற்கு உதவ முயற்சித்தல் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? அதனால் முடிந்ததென்றால் அது உங்களைத் தாக்குமே" என்று கேட்டார். அதற்கு அந்த மனிதர், "சீறிப் பாய்வதும் நகத்தால் பற்றிப்பிடிப்பதும் அதனுடைய இயல்பாக உள்ளது மற்றும் உதவுதல் என்பது என்னுடைய இயல்பாக உள்ளது. அந்த மிருகத்தால் அதன் இயல்பை மாற்ற இயலாது என்பதற்காக நான் ஏன் எனது இயல்பை மாற்றிக்கொள்ள வேண்டும்?" என்று பதில் அளித்தார்.[9]*

*அன்புகூரப்பட இயலாத ஒரு தனிநபரை நீங்கள் எவ்வாறு அன்புகூர முடியும்? அவருடன் சமாதானமாக வாழ்வதற்கு உங்களால் முடிந்த அளவு மிகச்சிறப்பானவற்றைச் செய்யுங்கள்.*

## *அவருக்கு உதவுங்கள் (12:19, 20)*

*பரீட்சையானது இன்னும் கடினமானதாகிறது, மற்றவர்கள் நம்மைத் துன்புறுத்த முயற்சி செய்தாலும்கூட, அவர்களுக்கு நாம்* உதவும்படி, *19 மற்றும் 20ம் வசனங்களில் பவுல் நமக்கு அறைகூவல் விடுத்தார்.*

***எதிர்மறை: பழிவாங்க நாடாதீர்கள் (வசனம் 19அ).***

*மீண்டும் பவுல் ஒரு எதிர்மறையுடன் தொடங்கினார்: "பிரியமானவர்களே, ... நீங்கள் பழிவாங்காமல்" (வசனம் 19அ, இ). 1:7க்குப் பின்பு, முதன்முறையாகப் பவுல் வாசகர்களை "பிரியமானவர்களே" (agapetos, இது agape குடும்ப வார்த்தைகளிலிருந்து வந்துள்ளது)[10] என்று அழைத்தார். அவர் இவ்விடத்தில் அந்தச் சொற்றொடரை ஏன் பயன்படுத்தினார்? ஒருவேளை அவர் தமது*

கலந்துரையாடல் இன்னமும் உண்மையான “அன்பின் [agape]” மீது கவனம் குவித்துள்ளதை வலியுறுத்தியிருக்கலாம் (வசனம் 9). ஒருவேளை அவருடைய கட்டளைக்கு இணங்குதல் என்பது அவரது சகோதர சகோதரிகளுக்கு எப்படிப் பட்ட ஒரு போராட்டமாக இருக்கும் என்று அவர் ஆழ்ந்து சிந்திக்கையில், அவரது இருதயம் அவர்களிடத்தில் சென்றிருக்கலாம்.

வேதாகமத்தின் கட்டளையொன்று எப்போதாவது பிரபலமான கருத் திற்கு நேரடியாக எதிர்த்து நின்றது என்றால் அது இதுவேதான்: “ஒருக்காலும் நீங்கள் பழிவாங்காதீர்கள்.” தனிப்பட்ட வகையில் பழிவாங்குதல் என்பதை ஊக்கு விக்கவும், புகழ்ந்து கொண்டாடப்படவும் கூடிய ஒரு காலத்தில் நாம் வாழ்கிறோம்.[11] பழிவாங்குதல் என்பது பல புத்தகங்கள், திரைப்படங்கள் மற்றும் தொலைக் காட்சிநிகழ்ச்சிகளின் கதைக்கருவாக உள்ளது. வாகனங்களில் ஒட்டப்படும் வில்லைகள், சுவரொட்டிகள் மற்றும் T - சட்டைகள் ஆகியவை, “நான் பித்தம் பிடித்திருக்கவில்லை, நான் சரிக்குச்சரிக்கட்டுகிறேன்” என்று அறிவிக்கின்றன. சிலவேளைகளில் பழிவாங்குதலுக்கு ஒப்பனை செய்து அதை “தனிப்பட்ட வகையில் நீதியைநிலைநாட்டுதல்” என்று அழைக்க முயற்சி மேற் கொள்ளப்படுகிறது. சிலர் தங்கள் பழிவாங்குதலுக்கு, “கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்,” என்று கூறுகிற பழைய ஏற்பாட்டின் ஆணையை (காண்க யாத்திராகமம் 21:24; லேவியராகமம் 24:20) தவறாகப் பயன்படுத்துவதன்மூலம் சாக்குப்போக்குக் கூறவும் முயற்சி செய்கின்றனர்.[12] மனிதர்கள் அதை உருமறைக்கவும் ருசியுள்ளதாக்கவும் எவ்வளவு முயற்சி செய்தாலும், அது இன்னமும் தீமைக்குத் தீமை செய்தலாக, பழிவாங்குதலாகவே உள்ளது; பவுல் இன்னமும், “அதைச் செய்யாதீர்கள்!” என்றே கூறினார்.

நீண்ட காலத்திற்கு முன்னர், பிரான்சீஸ் பேக்கன் (1561-1626) என்பவர், “பழிவாங்குதலில் ஒரு மனிதர் தமது விரோதிக்குச் சமமானவராக இருக்கிறார், ஆனால் அதைவிட்டுவிடும்போது அவர் தமது விரோதிக்கு மேலானவராக இருக்கிறார்” என்று எழுதினார்.[13] டேல் ஹார்ட்மேன் என்பவர், நாம் திருப்பித் தாக்கும்போது இருமுறை இழந்துவிடுகிறோம் என்று குறிப்பிட்டார். முதலாவது, நாம் தவறாக நடத்தப்படும்போது இழந்துபோகும் யாவற்றையும் இழந்துநிற்கிறோம். இரண்டாவது (இது மிகவும் மோசமானதாக உள்ளது), நாம் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது ஆவிக்குரிய வகையில் இழந்துபோகிறவர்களாகிறோம்.[14]

இன்னொருவர், “ஆனால் நான் எனக்காக எழுந்து நிற்கவில்லை என்றால், நான் பலவீனமாக இருப்பதாக மக்கள் நினைப்பார்களே” என்று மறுத்துரைக்க லாம். அது உண்மையாக இருக்கலாம், ஆனால் பின்வருவதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்: ஒருவர் திருப்பித் தாக்குவதற்கான வழிகளைக் கொண்டிருக்கும் போது, பழிவாங்குதலை மேற்கொள்வதற்கு தேவைப்படும் பலத்தைக் காட்டிலும் *பழிவாங்காதிருக்க* அதிக பலம் தேவைப்படுகிறது. இயேசு சிலுவையின்மீது இருந்தபோது, அவர் தம்மைப் பார்த்து “நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா” என்று கூறியவர்களால் இகழப்பட்டார் (மத்தேயு 27:40ஆ). அவர் சிலுவையிலிருந்து இறங்கி வந்திருக்க முடியும். அவர் தமது விரோதிகளின் வாயை அடைக்கும் பெலன் கொண்டிருந்தார். இருப்பினும், அவர் திருப்பித் *தாக்காதிருந்ததன்மூலம்* தமது பெலத்தைக் காண்பித்தார்.

*இது தீமையானது தண்டிக்கப்படாது விடப்பட வேண்டும் என்று அர்த்தப் படுகிறதா? இல்லவே இல்லை. இது, அந்தத் தண்டனையை நிறைவேற்றுவதில் நீங்களும் நானும் விழிப்புடன் இருக்க வேண்டியதில்லை என்று மாத்திரமே அர்த்தப்படுகிறது. அப்படி என்றால் தீமையானது எவ்வாறு தண்டிக்கப்படும்? நமது வேதபாட வசனப்பகுதியைத் தொடர்ந்து வாசியுங்கள்.*

***நேர்மறை: பழிவாங்குதலைத் தேவனுடைய கரங்களில் விட்டுவிடுங்கள் (வசனம் 19ஆ, இ).***

*"பிரியமானவர்களே, … நீங்கள் பழிவாங்காமல், [தேவனுடைய] கோபாக்கினைக்கு [orge] இடங்கொடுங்கள்" (ரோமர் 12:19அ, இ). கிரேக்க வசனத்தில் "தேவனுடைய" என்ற வார்த்தை இல்லை. அது "கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்றே வாசிக்கப்படுகிறது (காண்க KJV மற்றும் தமிழ் வேதாகமத்தில்). இருப்பினும், இவ்வேதபாட வசனத்தின் எஞ்சியபகுதி யானது, தேவனுடைய கோபத்தையே பவுல் தமது மனதில் கொண்டிருந் தார் என்பதைத் தெளிவாக்குகிறது[15]: " 'பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்,' என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால்" (வசனம் 19ஆ).* CJB *வேதாகமத்தில்,* "Vengence is my responsibility; I will repay" *என்றுள்ளது.*

*பவுல் இரண்டு வேறுபடுத்தி ஒப்பிடுதலை ஏற்படுத்தினார். 17ம் வசனத்தில் அவர், "தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்" என்று கூறினார். ஏன்? ஏனென்றால் அது தேவனுடைய பணியாக உள்ளது: " '*நானே *பதிற்செய்வேன்,' என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வசனம் 19; என்னால் வலியுறுத்தப்படுகிறது). 19ம் வசனத்தின் முடிவில், நாம் தனிப்பட்ட வகையில் பழிவாங்குதல் (ekdikeo) கூடாது என்று அவர் கூறினார். இது ஏன் என்பதற்கு, அவர் இவ்வசனத்தின் முற்பகுதி யில் விளக்கம் கொடுத்தார்: மீண்டுமாக, இது தேவனுடைய பணியாக உள்ளது: " 'பழிவாங்குதல் [ekdikesis] எனக்குரியது, …' என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

*"தேவனுடைய கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்பது, நாம் தேவனுடைய பணியைச் செய்வதற்கு முயற்சிமேற்கொள்ளக்கூடாது, ஒரு படி தள்ளிநின்று, தீமையைத் தண்டிப்பது பற்றித் தேவன் பார்த்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறது. டெய்லர் கேவ் என்பவர், தென் அமெரிக்க நாட்டில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறினார்.[16] ஒரு மனிதர் தமது நிலத்தில் மரக்கட்டைகளைத் திருடிக்கொண்டிருந்த இரு திருடர்களைப் பிடித்தார். அவர்களை எதிர்த்து நின்ற அவர், அவர்கள் அங்கிருந்து போகும்படி ஆணையிட்டார். அவர்கள் அவ்வாறு சென்றபோது, பழிவாங்குவதாக ஆணை யிட்டனர். பிற்பாடு அவர்கள் அந்த மனிதரையும் அவரது மூத்த மகனையும் கொலைசெய்தனர். அந்த இரு திருடர்களும் காவலர்களால் பிடிக்கப்பட்டனர். காவலர்கள், இளைய மகனையும் அவ்விருவரையும் அழைத்து, "இதோ துப்பாக்கி உள்ளது. நாங்கள் ஒருபக்கமாக நின்றுகொள்வோம். நீ உன் விருப்பம்போல் செய்யலாம்" என்று அந்த இளைய மகனிடத்தில் கூறினார். அந்த இளைய மகன் துப்பாக்கியைத் திரும்பக்கொடுத்துவிட்டு, "இல்லை, அது தேவனுடைய பணியாக உள்ளது" என்று பதில் அளித்தான்.*

*டேல் ஹார்ட்மேன் என்பவர் இளைஞராக இருந்தபோது, பக்குவடைந் திருந்த ஒரு பிரசங்கியார், "திருப்பித் தாக்குவதில் இறங்கி தேவன் இன்னும்*

*சிறப்பாகச் செய்திருக்கக்கூடியதைக் குழப்பி விடாதே" என்று அவரிடத்தில் கூறினார்.[17] தேவன் சகலத்தையும் அறிந்திருக்கிறார், ஆனால் நாம் அவ்வாறு அறிந்திருப்பதில்லை. தேவன் சகலத்தையும் காண்கிறார், ஆனால் நாம் அவ்வாறு காண்பதில்லை. தேவன் சர்வவல்லமையும் கொண்டிருக்கிறார், ஆனால் நாம் அவ்வாறு கொண்டிருப்பது இல்லை. நமது விரோதிகளைத் தண்டிக்க நாம் முயற்சிசெய்யும்போது, பாவத்தால் சிதைக்கப்பட்ட மற்றும் உணர்வுகளால் மூடப்பட்ட நமது சிந்தனையும், முழுமையற்ற நமது அறிவும், இருதயங்களை அறிய இயலாத நமது திறனும், நாம் சரியானபடிச் செய்வதைத் தடுக்கின்றன என்ற* R. C. *பெல் என்பவர் கூறினார்.[18]*

*தேவன் தீமைக்கு எவ்வாறு பதில்செய்கிறார்? குறைந்தபட்சம் மூன்று வழிகள் ரோமருக்கு எழுதிய நிருபத்தில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன:*

- *சில தண்டனைகள் பாவத்தின் இயல்பான விளைவின் மூலம் வருகின்றன. சிலர் "தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள்" அடைகின்றனர் (ரோமர் 1:27). ஜிம்மி ஆலென் என்பவர், "துன்மார்க்கர் இப்போது தங்கள் பாவத்திற்காகத் தண்டனை பெறுவதைவிட அதிகமாகத் தங்கள் பாவத்தினால் தண்டிக்கப்படுகின்றனர்" என்று எழுதினார்.[19]*
- *சிலவேளைகளில் தண்டனையானது நீதிமன்றங்களில் அளிக்கப் படுகிறது. 13ம் அதிகாரம், மனித அரசுகளைத் தேவன், "தீமை செய்கிறவன்மேல் கோபாக்கினை [orge] வரப்பண்ணும்படி" தமது ஊழியக்காரர்களாகவே ஏற்படுத்தினார் என்று வலியுறுத்துகிறது (ரோமர் 13:4).*
- *மனந்திரும்பாதவர்களுக்குக் கடைசியும் நிறைவுமான தண்டனை யானது "தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே [orge] தரப்படும் … தேவன் அவனவனுடைய கிரியை களுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்" (ரோமர் 2:5, 6).*

**நேர்மறை: அவருக்குப் பணிவிடை செய்வதற்கு வழிகளைக் கண்ணோக்குங்கள் (வசனம் 20).**

*ஒரு விரோதியின்மீது நாம் பழிவாங்க அனுமதிக்கப்படுவதில்லை என்றால், நாம் [அவருக்கு] என்ன செய்யக்கூடும்? நாம் அவர்மீது அன்புகூர்ந்து அவருக்கு உதவுவதற்கு முயற்சி செய்ய முடியும். பவுல், உபாகமம் 32:41ன் மேற் கோளைத் தொடர்ந்து நீதிமொழிகள் 25:21 வசனப்பகுதியிலிருந்து மேற்கோள் காண்பித்தார்: "அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங் கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு" (ரோமர் 12:20அ). இவ்வார்த்தைகள், லூக்கா 6:27ல் இயேசுவின் கட்டளைக்கான நடைமுறைப் பயன்பாடாக உள்ளன. "எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக் கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்." ஒரு சண்டையிலிருந்து புறம்பே நடத்தல் மாத்திரம் போதுமானதாக இருப்பதில்லை; நாம் நமது எதிராளிகளுக்கு உதவும் வழிகளைக் கண்டறிவதில் தொடக்கமுயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.*

உலகமானது, "உங்கள் எதிராளியின் பலவீனங்களை அறிந்து அவற்றை உங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளுங்கள். அவன் பசியாயிருக் கிறானா? அவனைப் பட்டினிகிடக்கச் செய்யுங்கள். அவன் தாகமாயிருக்கிறானா? அவனைத் தாகத்தினால் சாகும்படி செய்யுங்கள்" என்று அறிவுரை கூறுகிறது. இருப்பினும் அன்பானது, "உங்கள் எதிராளிக்கு என்ன தேவைகள் உள்ளன என்பதைக் கண்டறிந்து அவற்றை அளியுங்கள் - உணவோ, பானமோ அல்லது அவரது தேவை *எதுவாக இருந்தாலும்* அதை அவருக்கு அளியுங்கள்" என்று கூறுகிறது.

யாரேனும் ஒருவர் உங்களுக்குத் தவறிழைக்கும்போது, நான்கு பதில்செயல் கள் சாத்தியமாக உள்ளன. அவர் உங்களைப் புண்படுத்தினால், நீங்கள் அவரை அதிகமாய்ப் புண்படுத்தக்கூடும்; அது பழிக்குப் பழிவாங்கும் இயல்பாக [vindic-tiveness] உள்ளது. அவர் உங்களைப் புண்படுத்தினால், நீங்களும் அதேபோன்று அவரை நடத்தக்கூடும்; அது பழிதீர்த்துக்கொள்ளுதலாக [revenge] உள்ளது. அவர் உங்களைப் புண்படுத்தினால், நீங்கள் அவரைப் புறக்கணித்து அவருக்கு ஒன்றும் செய்யாமல் இருக்கக்கூடும்; அது தகுதியற்றதெனக் கருதுவதாக [dis-dain] உள்ளது. கடைசியாக, அவர் உங்களை புண்படுத்தினால், நீங்கள் அவர்மீது அன்புகூர்ந்து அவருக்குப் பணிவிடை செய்யக்கூடும்; அது கிறிஸ்துவின் வழியாக உள்ளது.[20] பெஞ்சமின் ஃபிராங்களின் என்பவர், "புண்படுத்துதலைச் செய்தல் என்பது உங்களை உங்கள் விரோதிக்குக் கீழாயிருக்கச் செய்கிறது; பழிவாங்குதல் என்பது உங்களை அவருக்குச் சமமாக்குகிறது; மன்னித்தல் என்பது உங்களை அவருக்கு மேலாக்குகிறது" என்று கூறினார்.[21]

நான் சில மாதங்களுக்கு முன்பு, கர்த்தருடைய சபையில் உறுப்பினர்களாக இருந்த திருமணமான ஒரு தம்பதியைப் பற்றிய புத்தகம் ஒன்றை வாசித்தேன். அவர்களின் இளம்வயது மகன், அதே வயதுடைய இளைஞனான ஒரு குடிகார ஓட்டுனரால் கொல்லப்பட்டான். அவர்கள் முதலில் பெரும்வேதனை அடைந்தனர். மிகக்கசப்பான உணர்வு கொண்டனர். இருப்பினும், அவர்கள் கிறிஸ்துவும் பவுலும் போதித்திருந்தவற்றை அறிந்திருந்தனர். தேவனுடைய உதவியுடன் அவர்கள் அந்த இளைஞனுடன் நட்புறவாகி, அவனைச் சீர்திருத்த உதவிசெய்தனர். கடைசியில் அவனது வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்டது மற்றும் அவர் களின் வாழ்வும் ஆசீர்வதிக்கப்பட்டது.[22]

நாம் நமது விரோதிகளுக்கு நன்மை செய்தால், அதன் விளைவு என்னவாக இருக்கும்? பவுல், நீதிமொழிகள் 25:22ல் இருந்து திகைக்கச் செய்யும் பின்வரும் வார்த்தைகளை மேற்கோள் காட்டினார்: "நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்" (ரோமர் 12:20ஆ). லியோன் மோரீஸ் என்பவர் பவுலின் இவ்வார்த்தைகளை "தெளிவாக அர்த்தம் தெரியப்படாத ஒப்புவமையின் விளக்கம்" என்று அழைத்தார்.[23] இந்தச் சொற்றொடரின் தோற்றம் குறித்துப் பல யூகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வேதாகம நிகழ்ச்சிகள் நடந்த தேசத்தில் மக்கள் தங்கள் தலைகளில் பாத்திரங்களைச் சுமந்து செல் லுதல் பற்றிச் சிலர் சுட்டிக்காண்பிக்கின்றனர். விரோதி ஒருவரின் நெருப்பு அணைந்து போய், அவர் தனது நெருப்பை மறுபடியும் பற்ற வைக்கக் கரிகளைத் தேடிக்கொண்டு இருந்தார் என்றால், தனது தலையிலுள்ள நெருப்புப் பாத்திரத்தி லிருந்து எரியும் கரிகளைப் போடுதல் என்பது பெருந்தன்மையின் அடையாளச் செய்கையாக இருக்கும்.[24] சில எழுத்தாளர்கள், "ஒரு மனிதர் தமது குற்றங்களைப்

*பொதுமக்கள் முன்னிலையில் ஒப்புக்கொள்வதற்கு, தனது தலையில், எரியும் நெருப்புப் பாத்திரம் ஒன்றைச் சுமந்து மனஸ்தாபப்படுவது என்ற எகிப்தியச் சடங்காச்சாரத்தை" குறிப்பிடுகின்றனர்.[25] ஜிம்மி ஆலன் என்பவரால் தரப்பட்ட யூகத்தை நான் மிகச் சிறப்பாக விரும்புகிறேன். விரோதிகள் ஒரு நகரத்தைத் தாக்கும்போது, அந்த நகரத்தில் குடியிருப்பவர்கள் தங்களைத் தாக்குபவர்களின் தலைகள் மீது - எரியும் நெருப்புக்கரிகள் உட்பட - பொருட்களை வீசுவதன் மூலம் தங்களைத் தற்காத்துக் கொள்வார்கள் என்று அவர் சுட்டிக்காண்பித்தார். பவுலின் வார்த்தைகள், தீமைக்கு எதிராக நன்மை செய்தலே மிகச்சிறந்த தற்காப்பாக உள்ளது என்று அர்த்தப்படுவதாக ஆலன் என்பவர் கருத்துத் தெரிவித்தார்.[26]*

*பவுலின் ஒப்புவமை எங்கிருந்து தோன்றியது என்று நாம் மிகச்சரியாக அறியாதிருப்பினும்கூட, இவ்வார்த்தைகள், நம்மைத் துன்புறுத்துபவர்களுக்கு நன்மை செய்தல் என்பது அவரை நேர்மறையான வகையில் பாதிக்கிறது என்று அர்த்தப்படுத்துவதாக நம்மில் பலர் புரிந்துகொள்கிறோம்.* MSG *வேதாகமம் பவுலின் வார்த்தைகளைப் பின்வருமாறு பொழிப்புரை செய்கிறது: "உங்கள் பெருந்தன்மை, நற்தன்மையைக் கொண்டு அவரைத் திகைக்கச் செய்யும்."* SEB *வேதாகமத்தில், "நீங்கள் அவரை வெட்கத்தினால் பற்றியெரிய வைப்பீர்கள்" என்றுள்ளது. தீமைக்கு நன்மையைத் திருப்பிச் செய்தல் என்பது அவரது மனச்சாட்சியைத் தூண்டி அவரை மனந்திரும்பச் *செய்யும்*. வில்லியம் பார்க்ளே என்பவர், "பழிவாங்குதல் என்பது அவரது ஆவியை முறிந்துபோகப்பண்ணும்; ஆனால் இரக்கம் என்பது அவரது இருதயத்தை உடைந்துபோகச்செய்யும்" என்று எழுதினார்.[27]*

*இது விரோதிக்கு நன்மை செய்தலின் தவிர்க்க இயலாத விளைவாயிருக்குமா? இல்லை - ஆனால் இதைச்செய்தல் என்பது பொதுவாக *உங்களுக்கு* உதவும். நீங்கள் உங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்திருக்கிறீர்கள் என்று அறிய முடியும், மற்றும் நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து கசப்பை போக்குவீர்கள். கூடுதலாக, தீமைக்கு நன்மை செய்தல் என்பது *சிலவேளைகளில்,* தீமை செய்தவரிடத்தில் ஒரு நேர்மறையான செயல்விளைவைக் கொண்டிருக்கக் கூடும்.* India Report *என்ற அறிக்கை, ஒலிப்பெருக்கி மூலமாக இந்துப் பாடல்களை உரத்த சப்தத்தில் ஒலிபரப்பி, சபையின் சுவிசேஷ அறிவிப்புக் கூட்டங்களுக்கு இடையூறு செய்த ஒரு அயலகத்தவரைப் பற்றிக் கூறிற்று. ஒருநாள் அந்தப் பகுதியில் பயங்கரமான புயல் ஒன்று வீசியது. அந்த அயலகத்தவரும் மற்றவர்களும் சபைக்கட்டிடத்தில் அடைக்கலம் புகுந்தனர். அவர்களுக்கு மூன்று நாட்களாக, சபையின் உறுப்பினர்கள் உணவளித்தனர். பிற்பாடு அந்த மனிதர் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தார்.[28]*

*ஒரு விரோதியை ஒழிப்பதற்கு அவரை நண்பராக்கிக் கொள்வதே சிறந்த வழி என்று கூறப்பட்டுள்ளது. அன்புகூரப்பட இயலாத ஒரு நபர்மீது நாம் எவ்வாறு அன்புகூர வேண்டும்? நாம் அவருக்கு *உதவுவதற்கான* வழிகளைக் கண்டறிய வேண்டும்.*

## அவருக்கு நன்மை மாத்திரம் செய்யுங்கள் (12:21)

*21ம் வசனத்தில் பவுல் கொடுமைப்படுத்துபவர் தொடர்பாகத் தாம் கூறியிருந்தவற்றைத் தொகுத்துரைத்தார்: "நீ தீமையினாலே வெல்லப்படாமல்,*

*தீமையை நன்மையினாலே வெல்லு." "வெல்லு" என்பதற்கான வார்த்தை (இது nikao என்பதிலிருந்து வந்துள்ளது) "வெற்றி" என்பதற்கான கிரேக்க வார்த்தையான nike என்பதன் வினைச்சொல் வடிவமாகும்.[29] நாம் தவறாக நடத்தப்படும்போது, தீமையினால் மூழ்கடிக்கப்படுதல், மற்றும் அது நம்மைக் கட்டுப்படுத்த அனுமதித்தல் என்பது சுலபமானதாக உள்ளது. ஒன்று, தீமை நம்மேல் வெற்றிகொள்ளும் அல்லது நாம் தீமையின்மேல் வெற்றிகொள்வோம் என்று பவுல் கூறினார்.*

***எதிர்மறை: தீமையினால் வெல்லப்படாதிருங்கள் (வசனம் 21அ).***

*21ம் வசனம், "நீ தீமையினாலே வெல்லப்படாமல்" என்று தொடங்குகிறது. தீமை எவ்வாறு நம்மை வெல்ல முடியும்? நாம் படித்துமுடித்துள்ள வசனங்களைத் திரும்பிக் கண்ணோக்குங்கள். நாம் தேவனிடத்தில் நமது விரோதிகளை சபிக்கும்படி கேட்டால் (வசனம் 14), நாம் தீமையினால் வெல்லப்பட்டிருக்கிறோம் என்றாகிறது. நாம் தீமைக்குத் தீமையைத் திருப்பிச் செலுத்த முயற்சி செய்தால் (வசனம் 17), தீமை நம்மை வென்றுள்ளது என்றாகிறது. நாம் பழிவாங்கத் தேடினால் (வசனம் 19), தீமையானது நம்மேல் வெற்றியை ஆதாயப்படுத்தியுள்ளது என்றாகிறது. விஷயம் அப்படியிருக்கும்போது, "நாம் தீமைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுவிட்டோம், அதன் செல்வாக்கு வட்டத்திற்குள் உறிஞ்சப்பட்டுவிட்டோம், அதினால் தோற்கடிக்கப்பட்டுவிட்டோம், ... அதினால் 'அதிகாரம் செலுத்தப்பட்டு விட்டோம்'* [Phillips] *என்றாகிறது" என்று ஜான்* R. W. *ஸ்டாட் கூறினார்.[30]*

***நேர்மறை: தீமையை நன்மையினால் வெல்லுங்கள் (வசனம் 21ஆ).***

*தீமை வெற்றிபெற்றிருப்பதிலிருந்து அதை நாம் எவ்வாறு தடுக்க முடியும்? "தீமையை நன்மையினாலே வெல்லு" என்று பவுல் கூறினார் (வசனம் 21ஆ). அது அர்த்தப்படுத்துவது என்ன? அது, நமது விரோதிகளை ஆசீர்வதிக்கும்படி தேவனிடத்தில் கேட்குதல் என்று அர்த்தப்படுகிறது (வசனம் 14). அது நம்மிடத்திலுள்ள எல்லாவற்றுடனும், நமது எல்லா இருப்புடனும், யாவரோடும் சமாதானமாக வாழ முயற்சி செய்தல் என்று அர்த்தப்படுகிறது (வசனம் 18). அது நம்மைப் பகைக்கும் எவரொருவருக்கும் நன்மை செய்தல் - அவரை அன்புகூர்ந்து அவரது தேவைகளுக்கு உதவியளித்தல் - என்று அர்த்தப்படுகிறது (வசனம் 20).*

*தீமையை நன்மையினால் வெல்லுதல் சுலபமானதாக உள்ளதா? இல்லை. அது சாத்தியமானதா? ஆம், கர்த்தருடைய பெலத்தினால் அது சாத்தியமாகிறது. தேவனுடைய உதவியுடன் நீங்களும் நானும் தீமையை நன்மையினால் வெல்ல முடியும்.*

## *முடிவுரை*

*அன்புகூரப்பட இயலாதவர்களை அன்புகூருதல் என்பது கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் கொண்டிருக்கக் கூடியவற்றிலேயே மிகவும் கடினமான பரீட்சைகளில் ஒன்றாக இருக்கிறது என்று குறிப்பிட்டதன்மூலம் நான் இந்தப் பாடத்தைத் தொடங்கினேன். எல்லாப் பரீட்சைகளையும் போலவே, இதுவும் மற்றவர்களைக் காட்டிலும் சிலருக்கு மிகவும் அறைகூவல் விடுப்பதாக உள்ளது. சிலர் தங்கள் முன்கோப உணர்வு மற்றும் வளர்ப்பு முறை முதலியவற்றால்,*

*தங்களைப் புண்படுத்த முயற்சிப்பவர்களைப் புண்படுத்த இயல்பாகவே விரும்புகின்றனர். இருப்பினும், இது எவரொருவருக்கும் சுலபமான பரீட்சையாக இருப்பதில்லை.*

*எல்லாப் பரீட்சைகளையும் போலவே, இதுவும் நாம் இதற்கு ஆயத்தமாக இருந்தால் மிகச்சுலபமானதாக உள்ளது. ஆயத்தம் செய்வதற்கு நாம் ரோமர் 12:14, 17-21ல் பவுல் கட்டளையிட்டவற்றை மிகச்சரியாகச் செய்யத் தீர்மானிக்க வேண்டும். பின்பு நாம் அதை மாத்திரம் செய்வதில் கர்த்தர் நமக்கு உதவும்படிக்கு அவரை நெருங்கி நிலைத்திருக்க வேண்டும்.*

*நாம் ஆயத்தம் செய்தாலும், எப்போதும் நாம் இந்தப் பரீட்சையில் தேர்ச்சி அடைந்து விடுவோமா? அனேகமாக இல்லை. இருப்பினும், நாம் தவறிவிட்டால், (ஒரு கருத்தில்) நாம் இந்தப் பரீட்சையை இரண்டாவது முறையும் முயற்சி செய்ய முடியும். நாம் நமது தோல்விகளுக்காக மனம்வருந்தி, நம்மை மன்னிக்கும் படி தேவனிடத்தில் கேட்க முடியும். நம்மைத் துன்புறுத்துபவரிடத்தில் சென்று, அவரிடத்தில் நாம், "நான் ஒரு கிறிஸ்தவன் என்ற வகையில் பதில் செயல் செய்யவில்லை. எனது செயல்களினால் நான் சங்கடம் அடைகிறேன், உங்களிடத்தில் மன்னிப்பை வேண்டுகிறேன்" என்று கூறமுடியும்.*

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, ஒரு நபர் கிறிஸ்தவரா வதன் மூலம் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38), அல்லது தவறிப்போயுள்ள கிறிஸ்தவரின் விஷயத்தில், கர்த்தரிடம் திரும்புவதன் மூலம் (நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9) "கர்த்தரிடத்தில் நெருங்கி நிலைத்திருப்பது" எப்படி என்பதைக் கூற விரும்பலாம். நீங்கள் பின்வருவது போன்ற சிலவற்றைக் கூறலாம்: "எதிர் மறை உணர்வுகளிடம் சரணடைவதற்குப்பதில், கர்த்தரிடத்தில் உங்கள் இருதயத்தையும் வாழ்வையும் ஒப்புக்கொடுங்கள்." "தீமையின் மீது வெற்றி" என்பது இந்தப் பாடத்திற்கான இன்னொரு தலைப்பாக இருக்க முடியும்.*

*நமது பாடத்திற்கான வசனப்பகுதியில், பவுல் ஒருவருடைய குடும்பத்தைப் பாதுகாத்தல் மற்றும் அது தொடர்பான விஷயங்களைக் கையாளவில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக, அவர் சேதம் ஏற்படுத்தப்பட்ட பின்பு தனிப்பட்ட வகையில் பழிவாங்காதிருத்தல் பற்றியே கவனம் குவித்தார்.*

---

*குறிப்புகள்*

[1]Adapted from John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 334-45. [2]John Kachelman, "How to Really 'Even the Score,' " sermon preached at Judsonia church of Christ, Judsonia, Arkansas, 14 June 2003. [3]Adapted from C. Roy Angell, *Iron Shoes* (Nashville: Broadman Press, 1953), 52-53. [4]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans,* Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 243. [5]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 417. [6]KJV வேதாகமத்தில் "Provide things honest in the sight of all men" *என்றுள்ளது. "யோக்கியமானவைகளைச் செய்தல்"* (*kalos*) *என்பது, நேர்மையாக இருத்தலை உள்ளடக்கு*

கிறது, ஆனால் அதைக் காட்டிலும் அதிகமானவற்றை இது சூழ்ந்துள்ளது. NKJV வேதாகமம், "Have regard for good things in the sight of all men" என்று கூறுகிறது. [7]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 274. [8]John Kachelman, "How to Handle Hostility," *Truth for Today* (May 1989): 27. [9]Adapted from Robert J. Morgan, *Nelson's Complete Book of Stories, Ilustrations, & Quotes* (Nashville:Thomas Nelson Publishers, 2000), 267-68. [10]பல மொழிபெயர்ப்புகள் "நண்பர்களே" அல்லது "அன்பான நண்பர்களே" என்பது போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளன, ஆனால் *agapetos* என்பது வெறும் நட்புறவைக் காட்டிலும் மிகப்பலத்ததாகவும் மிக ஆழமானதாகவும் உள்ளது.

[11]இந்தப்பத்தியை நீங்கள் வாழும் பகுதிக்குப் பொருந்துமாறு தழுவியமைத்துக் கொள்ளுங்கள். மக்கள் தனிப்பட்ட வகையில் பழிவாங்க முயற்சித்தலுக்கு குடும்பங்களுக் கிடையில் நீண்ட காலமாக இருக்கும் பகைமைகள் உதாரணமாக உள்ளன. [12]முதலாவது, பழைய ஏற்பாட்டு ஆணையானது, சமூகத்தினால் தண்டிக்கப்படுதல் பற்றிக்கூறும் அளவுக்கு, தனிப்பட்ட பழிவாங்குதலைக் கூறுவதில்லை என்பதால், இது தவறாகப் பயன்படுத்தப்படுகிறது எனலாம். இரண்டாவது, நாம் *புதிய* ஏற்பாட்டுத் தர அளவையின்படி அன்றாடம் வாழ வேண்டியுள்ளது (காண்க மத்தேயு 5:38-42). [13]Lewis Copeland, ed., *Popular Quotations for All Uses,* rev. ed. (Garden City, N. Y.: Doubleday & Co., 1961), 391. [14]Dale Hartman, sermon preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 24 October 2004. [15]பவுல் துன்புறுத்தப்படுபவர்களின் கோபம் அல்லது துன்புறுத்துபவரின் கோபம் என்பதைக் குறிப்பிட்டார் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் அவர் தேவனுடைய கோபத்தையே குறிப்பிட்டார் என்பதைச் சந்தர்ப்பப்பொருள் சுட்டிக் காண்பிக் கிறது. [16]Taylor Cave, class taught at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 14 July 2005. [17]Dale Hartman, class taught at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 21 December 2003. [18]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 141-42. [19]Jimmy Allen, *Survey of Romans,* 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 105. [20]Adapted from Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 373.

[21]Adapted by Dale Hartman, sermon preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 3 April 2005; USHistory.org™; "The Electric Ben Franklin: The Quotable Franklin" (http:/ /www.ushistory.org/franklin/quotable/singlehtml.htm; Internet; accessed 1 June 2006). [22]Bob Stewart, *Revenge Redeemed* (Old Tappan, N. J.: Fleming H. Revell Co., 1991). [23]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 454. [24]Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 86. [25]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 217-18. [26]Allen, 105. [27]William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 170. [28]*India Report,* Central church of Christ, Lufkin, Texas, 15 July 2002. [29]Vine, 453, 660. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு Nike என்ற கம்பெனியின் காலணிகள் பற்றித் தெரிந்திருந்தால், நீங்கள் அந்தக் கம்பெனிப் பெயரை ஒரு விவரிப் பாகக் குறிப்பிடலாம். [30]Stott, 337.